ப.ஏ

## வேதாகம கதாபாத்திரங்கள்
## Bible Characters

39



# பரிசுத்த வேதாகமத்தில் நெகேமியா
# Nehemiah In The Holy Bible

1. யூதாகோத்திரத்து அகலியாவின் குமாரன்
   மற்றொரு பெயர் திர்ஷாதா - நெகே.10:1
2. எருசலேமின் செய்தி கேட்டு சிலநாளாய்த்
   துக்கித்து பரலோகத்தின் தேவனை நோக்கி
   ஜெபித்தான் - நெகே.1:3
3. ராஜாவின் பானபாத்திரக்காரன் - நெகே.2:1
4. ராத்திரியில் எருசலேமில் நகர சோதனை செய்தான்- நெகே.2:11
5. எருசலேமின் அலங்கத்தை கட்ட அழைப்பு - நெகே.2:17
6. அற்பமான யூதர்கள் என்றார்கள் - நெகே.4:1
7. 12 வருஷம் படிவாங்காமல் வேலைசெய்தான் - நெகே.5:14
8. 52 நாட்களில் அலங்கத்தை கட்டிமுடித்தார்கள் - நெகே.6:15
9. ஓய்வுநாளை வேலை நாளாக்குகிறவர்களை
   திடசாட்சியாக கடிந்துகொண்டான் - நெகே.13:15
10. மறுஜாதியான ஸ்திரீகளை சேர்த்துக்கொள்வதால்
    தேவனுக்கு துரோகிகளாகிறீர்கள் என்றான் - நெகே.13:27

## இந்தப் பாடத்திற்கான கேள்வி:

***வான சேனைகள் உம்மைப் பணிந்து கொள்கிறது என்று கர்த்தரை நோக்கி ஸ்தோத்திரம் செலுத்திய கோத்திரம் எது?***

**விடை:** லேவி - "வான சேனைகள் உம்மைப் பணிந்துகொள்ளுகிறது" (நெகே.5:6)



பு.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்

**Bible Characters**

**40**



## பரிசுத்த வேதாகமத்தில் தீமேத்தேயு
## Timothy In The Holy Bible

1. தகப்பன் கிரேக்கன் தாய் யூதஸ்திரீ - அப்.16:1
2. தாயும், பாட்டியும் இவனை யூதமார்க்கத்தின்படி வளர்த்தார்கள் - 2தீமோ.1:4
3. பவுலின் உடன்வேலையாள் - ரோம.16:21
4. பவுலோடு சபைகளுக்கு கடிதங்களை எழுதினான் - 2கொ.1:1
5. விசுவாசத்தில் உத்தம குமாரன் - 1தீமோ.1:2
6. சுவிசேஷ வேலையைச் செய்ய பவுல் ஆலோசனை- 2தீமோ.4:5
7. தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதிய கடிதத்தில் தேவபக்தியின் இரகசியத்தை வெளிப்படுத்தல் - 1தீமோ.3:16
8. சபையில் எப்படிப்பட்ட கண்காணியை நியமிக்கவேண்டும் என்ற போதனை - 1தீமோ.3:1
9. கடைசி நாட்களில் கொடிய காலம் - 2தீமோ.3:1
10. காவலிலிருந்து விடுவிக்கப்பட்ட தீமோத்தேயு - எபி.13:23

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

**பவுல் தீமோத்தேயுவுக்கு விருத்தசேதனம் பண்ணினானா?**

**விடை:** ஆம் - "அவனுடைய தகப்பன் கிரேக்கன் என்று அவ்விடங்களிலிருக்கும் யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால், அவர்கள் நிமித்தம் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்" (அப்போஸ்தலர் 16:3)



## வேத அறிவுப் போட்டி எண்: 284

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடையை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக் காத்துக்கொள் அதுவே உனக்கு என்னவாயிருக்கும்?
2. சிநேகிதரைப் பேர்பேராக வாழ்த்துவாயாக என எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. வாழ்வுகாலத்தில் நன்மையை அநுபவித்திரு, தாழ்வுகாலத்தில் என்ன செய்?
4. கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளாகி தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தவரைக் கண்டவன் யார்?
5. மேய்ப்பனைப்போலத் தமது மந்தையை என்னசெய்வார்?
6. இரக்கமுள்ளவர்கள் பார்க்கியவான்கள் அவர்கள் எதைப் பெறுவார்கள்?
7. வேதத்தைப் போதிக்கிறவர்கள் என்னை அறியாமலுமிருந்து, மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம் பண்ணினார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தருடைய வார்த்தை உண்டானது?
8. இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிடுகிறார் அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் என்ன செய்தார்கள்?
9. என் ஜனமாகிய குமாரத்தி அடைந்த கேட்டினிமித்தம் என் கண்களிலிருந்து எவைகள் பாய்கிறது?
10. சாத்தான் 18 வருஷமாக கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய ஒரு ஸ்திரீயை அழைத்து உன் பலவீனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டாய் என்றவர் எவர்?

## வேதாகம ஆய்வு... 62

## மேதியனாகிய தரியு

**Darius the Mede**

1. **அகாஸ்வேருவின் மகன் – தானி.9:1**
2. **ஒரு வருடம் மாத்திரம் அரசாண்டான்**
3. **தானியேலை சிங்கங்களின் கெபியிலே போட்டான் – தானி.6:16**
4. **தன் ராஜ்யமெங்கும் ஜீவனுள்ள தேவனை அறிவித்தான் – தானி.6:26**
5. **தன் ராஜ்யமெங்கும் 120 தேசாதிபதிகளை ஏற்படுத்தினான் – தானி.6:1**



